ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 55 — 1973 අප්‍රේල් 11 වැනි බදාදා — 1973.04.11

55 ஆம் இலக்கம்—1973 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப்பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனம் .. .. .. | — |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. .. | 257 |
| அமைச்சரவை நியமனங்களும் பிறவும் .. .. | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — |
| நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபையின் நியமனங்களும் பிறவும் .. | 258 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. | 259 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. .. | 261 |
| விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. .. | — |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. .. | — |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 265 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

எண் : டி. 350/ஆர். ஈ. சி. ரி.

1973 இன் இல.

**தரைப்படை—நிரந்தரப்படை—அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அரசாணையமர்வுகளுக்கான திருத்தம்**

வெள்ளிக்கிழமையாகிய 1972, யூன் 2 ஆம் திகதிய 10 ஆம் எண் கொண்ட இலங்கைக் குடியரசுக் கசெற்றில் வெளியிடப்பெற்ற 1972 ஆம் ஆண்டின் 25 ஆம் எண்கொண்ட அறிவித்தலுக்கான திருத்தம் :

" எஸ். /96227 தற்காலிக உவாறன்ற் ஒபிசர் II மலிநத்திகெதற ஸ்ரன்லி பீறிஸ்,—1 வேவுபார்த்தற் பேரணி, இலங்கைப் போர்க்கலந்தாங்கிய சிறப்பணி "

**என்பதற்காக**

" எஸ். /96277 தற்காலிக உவாறன்ற் ஒபிசர் II மல்வத்தேகெதற ஸ்ரன்லி பீறிஸ்—1 வேவுபார்த்தற் பேரணி, இலங்கைப் போர்க் கலந்தாங்கிய சிறப்பணி "

**என வாசிக்குக.**

அதி உத்தமனுரின் ஆணைப்படி,
வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1972 ம் ஹூ செத்தெம்பர் மீ 28 ந் உ.

4-263—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55

1973 இன் இல. 225

எண் : டி. 22/ஆர்.ஈ.சி.ரி./233

**இலங்கை கடற்படை—நிரந்தர கடற்படை—அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறல்**

கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர் 1973, மே மாதம் 16 ஆம் திகதியிலிருந்து இலங்கைக் கடற்படையின் நிரந்தர கடற்படையிலிருந்து இளைப்பாறுதலை அதி உத்தமராம் சனாதிபதி அவர்கள் அங்கீகரித்துள்ளார் :

கொமாண்டர் ஈ. பி. விக்கிரமசிங்ஹ, இலங். க. ப.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,
வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஹூ மார்ச்சு மீ 20 ந் உ.

4-297—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஹூ மே மீ 05 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

# நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபையின் நியமனங்களும் பிறவும்

1973 இன் இல. 226

**அரசியலமைப்பின் 126 (5) ஆம் பிரிவின் கீழ் அமைச்சரவையால் தமக்குக் கையளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் நீதிச்சேவைகள் ஆலோசனைச்சபைச் செயலாளரினாற் செய்யப்பட்ட பதில் நியமனங்கள்**

| அலுவலர் பெயர் | பதில் நியமனம் | பதில் நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. எஸ். டி. ஜயசுந்தர .. | பதில் இணைமாவட்ட நீதிபதி முதலியன, கண்டி. அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1973 ஜூலை 2 லிருந்து .. | கண்டி மாவட்ட நீதிமன்ற பி. 7071 இலக்க வழக்கில் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. ஜீ. எவ். எச். அதுறுப்பான .. | பதில் இணை நீதவான் முதலியன, கொழும்பு. அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1973 ஏப்ரல் 2 லிருந்து .. | கொழும்பு தெற்கு நீதிமன்ற 24204/எ, 23091/எ, கொழும்பு விண்ணப்ப நீதிமன்ற 621, 644 ஆகிய இலக்க வழக்குகளை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| ஷை .. | ஷை .. | 1973 ஏப்ரல் 3 லிருந்து .. | கொழும்பு தெற்கு நீதிமன்ற 3432/எ, 21739/எ ஆகிய இலக்க வழக்குகளை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. ஜே. சேனாதிராஜா .. | பதில் இணை நீதவான் முதலியன, காலி. அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1973 மார்ச் 26 லிருந்து .. | காலி நீதிமன்ற 70989, 73305, 73354, 73526, 74960, 76131, 71517/எ, 74209/எ, 73248/எ, 72850/எ, 74210/எ, 39033 ஆகிய இலக்க வழக்குகளில் தண்டனை விதிப்பதற்கு |
| திரு. பி. பி. ரம்புக்வெல்ல .. | பதில் இணை நீதவான் முதலியன, நீர்கொழும்பு. அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1973 மார்ச் 28 லிருந்து .. | நீர்கொழும்பு நீதிமன்ற 30280 இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. எ. எஸ். விஜதுங்க .. | பதில் இணைநீதவான் முதலியன, மாத்தறை. அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1973 ஏப்ரல் 28 லிருந்து.. | மாத்தறை நீதிமன்ற 57280 இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. இ. ஆனந்த பெரேரா .. | பதில் இணைநீதவான் முதலியன, நீர்கொழும்பு. அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1973 மார்ச் 24 லிருந்து.. | நீர்கொழும்பு நீதிமன்ற 45008, 34532 இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. கி. எல். த சில்வா .. | பதில் இணை நீதவான் முதலியன, பலப்பிட்டி | 1973 மார்ச் 15, 16 .. | திரு. ஜே. சி. எ. சி. எம். எஸ். சில்வா இல்லாத காலங்கள் |
| திரு. உவால்டர் டி. பெரேரா .. | பதில் இணை நீதவான் முதலியன, கொழும்பு | 1973 மார்ச் 20 .. | திரு. எஸ். பி. டபிள்யு. சிறிவர்த்தன இல்லாத காலம் |
| திரு. ஜே. கே. விஜசிங்க .. | பாணந்துறை பதில் இணை நீதவான் முதலியன, கோறளை | 1973 மார்ச் 17 .. | திரு. எம். சற். ஐ. அசீஸ் இல்லாத காலம் |
| திரு. கே. ஈ. செனிவிரட்ண .. | பதில் இணை நீதவான் முதலியன, இரத்தினபுரி | 1973 மார்ச் 22 லிருந்து 24 | திரு. ஆர். இளயபெருமா இல்லாத காலங்கள் |
| திரு. எம். எம். ஹல்லால்தீன் .. | அனுராதபுரம் பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன், பொலனறுவை | 1973 மார்ச் 29 லிருந்து 31 | திரு. டபிள்யு. என். எஸ். விஜரட்ண இல்லாத காலங்கள் |
| திரு. என். எ. ருஜரட்ணம் .. | பதில் இணை நீதவான் முதலியன, பருத்தித்துறை | 1973 மார்ச் 15 லிருந்து 17 | திரு. எஸ். ஜோகனுதன் இல்லாத காலங்கள் |
| திரு. என். எஸ். சி. அழகமுத்து .. | பதில் இணைமாவட்ட நீதிபதி முதலியன, நுவரேலியா | 1973 மார்ச் 24 லிருந்து 28 | திரு. எல். எ. குணவர்த்தன இல்லாத காலங்கள் |
| திரு. பி. எம். டபிள்யு. எ. டபிள்யு. ஜயவர்த்தன. | கொழும்பு பதில் இணை நீதவான் முதலியன, கொழும்புக்கோட்டை | 1973 மார்ச் 21 .. | திரு. சி. மனோகரா இல்லாத காலம் |
| திரு. பி. எ. கீர்த்திநந்த .. | பதில் இணை நீதவான் முதலியன, கொழும்பு. போக்குவரத்துமன்று, நாரகென்பிட்டி | 1973 மார்ச் 27 .. | திரு. எல். எஸ். பெரேரா இல்லாத காலம் |
| திரு. எம். எச். கரீம் .. | ஷை .. | 1973 மார்ச் 28 .. | ஷை |
| திரு. எச். ஜி. பி. ஜயதிலக்க .. | பதில் இணை நீதவான் முதலியன, நீர்கொழும்பு | 1973 மார்ச் 16 .. | திரு. எஸ். சேமசிங்க இல்லாத காலம் |
| திரு. ஜே. என். எ. த குரூஸ் .. | ஷை .. | 1973 மார்ச் 19 .. | ஷை |
| திரு. எச். டி. உபாலி .. | பதில் இணை நீதவான் முதலியன, பாணந்துறை | 1973 மார்ச் 17 .. | திரு. பி. பி. ரம்புக்வெல்ல இல்லாத காலம் |
| திரு. எல். டபிள்யு. பெர்னாண்டோ .. | கண்டி பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, கம்பளை | 1973 மார்ச் 16 லிருந்து 19 | திரு. ஆர். எல். த சில்வா இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். ஆர். பி. எ. குணதிலக்க .. | பதில் இணை நீதவான் முதலியன, களுத்துறை | 1973 மார்ச் 9 .. | திரு. எல். எம். ஜயரட்ண இல்லாத காலம் |
| திரு. டி. பி. ரணசிங்க .. | பதில் இணை நீதவான் முதலியன, கம்பகா | 1973 மார்ச் 24, 31 .. | திரு. சி. எ. பெரேரா இல்லாத காலங்கள் |
| திரு. பிரிட்ஸ் கோதாகொட .. | பதில் இணை நீதவான் முதலியன, குருணாகல் | 1973 மார்ச் 26 .. | திரு. என். பி. டி. எஸ். விஜசேகர இல்லாத காலம் |
| திரு. ஜே. எஸ். ருஜபக்ச .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, சிலாபம் | 1973 மார்ச் 15, 16, ஏப்ரல் 2 லிருந்து 5, 9 லிருந்து 11 | திரு. கே. சி. ஈ. த அல்விஸ் இல்லாத காலங்கள் |
| திரு. எச். ஜி. பண்டிதசேகர .. | ஷை .. | 1973 ஏப்ரல் 6 .. | ஷை |
| திரு. ஈ. கணேகொட .. | பதில் தலைவர் தொழில் முறைமன்று .. | 1973 ஏப்ரல் 6 .. | கொழும்பு தொழில் முறைமன்று (14) ன் 14/1022/72 லிருந்து 1025/72, 1026/72 லிருந்து 1029/72 ஆகிய இலக்க வழக்குகளை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |

| அலுவலர் பெயர் | பதில் நியமனம் | பதில் நியமனம் செயற்படும்திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. ஈ. கணேகொட .. | பதில் தலைவர் தொழில்முறைமன்று .. | 1973 ஏப்ரல் 3 லிருந்து 11 | கொழும்பு தொழில் முறை மன்று (14) ன் 14/393/71, 333/71, ஐடி/எல்ரி/14/2, 297/71, 698/71 ஆகிய இலக்க வழக்குகளை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. ஆர். வி. வில்வருஜா .. | பதில் இணை நீதவான் முதலியன, வவுனியா | 1973 மார்ச் 16 லிருந்து 18 | திரு. எ. எம். எம். அல்லாகுதீன் இல்லாத காலங்கள் |
| திரு. எ. சீமாம்பிள்ளை .. | பதில் இணை நீதவான்முதலியன, மன்னார் | 1973 மார்ச் 23 லிருந்து 25 | திரு. கே. வி. நவரட்ணம் இல்லாத காலங்கள் |
| திரு. டபிள்யு. பி. தசனுயக்க ... | அளுத்குருகோறளை முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் இணைத்தலைவர், அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1973 ஏப்ரல் 19 லிருந்து பதினைந்துதினங்கள் | வத்தளை ஊர்நீதிமன்ற 3599 இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. பி. டி. பி. விஜசேகர .. | புத்தளம்பற்று முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் இணைத்தலைவர், அவரது ஏனையகடமைகளுடன் கூடுதலாக | 1973 ஏப்ரல் 26 லிருந்து பதினைந்து தினங்கள் | வத்தளை ஊர்நீதிமன்ற 6906, 6907 ஆகிய இலக்க வழக்குகளை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. ஜி. பி. பற்றிக் .. | ஏறுவில்போரைதீவு முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 மார்ச் 16, 17, 19 .. | திரு. கே. சண்முகனுதன் இல்லாத காலங்கள் |
| திரு. வஜிரா மாரசிங்க .. | தெகிகம்பள்கோறளை முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 மார்ச் 16 .. | திரு. கே. ஜே. ஜே. பெரேரா இல்லாத காலம் |
| திரு. என். பி. கன்னேவ .. | உடுகிந்த முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 மார்ச் 22, 23 .. | திரு. எம். சலாகுதீன் இல்லாத காலங்கள் |
| திரு. சிறுமல் எ. ஈ. பின்ரோ .. | புத்தளம்பற்று முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில்தலைவர் | 1973 மார்ச் 15, 16 .. | திரு. டபிள்யு. எ. பி. ஒ. பெர்னுண்டோ இல்லாத காலங்கள் |
| திரு. எ. கேதீஸ்வரன் .. | வவுனியா தெற்கு முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 மார்ச் 20 .. | திரு. எ. எம். எம். அல்லாகுதீன் இல்லாத காலம் |
| திரு. எஸ். எ. யற்றவர் .. | மாத்தளை தெற்கு முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 மார்ச் 7 லிருந்து 9 | திரு. ஜி. நுகவெல இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். வல்லிபுரம் .. | வலிகாமம் வடக்கு முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 மார்ச் 8 லிருந்து 10 | அல்லது மறு அறிவித்தல்வரை |
| திரு. கே. விக்னேஸ்வரன் .. | ஷை ஷை .. | 1973 மார்ச் 12 லிருந்து 17 | ஷை ஷை |
| திரு. எஸ். லோகேஸ்வரன் .. | ஷை ஷை .. | 1973 மார்ச் 19 லிருந்து 24 | ஷை ஷை |
| திரு. ஆர். எம். எ. என். டபிள்யு. ருஜகருண | சீயன்னக்கோறளை கிழக்கு முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 ஏப்ரல் 19 .. | திரு. டபிள்யு. பி. தசனுயக்க இல்லாத காலம் |
| திரு. ஜி. சூரிய ஆராச்சி .. | குளியப்பிட்டி முதலியவற்றின் ஊர்நீதிமன்றப்பதில் தலைவர் | 1973 மார்ச் 15 .. | திரு. எஸ். கடவத்த ஆராச்சி இல்லாத காலம் |
| திரு. கே. பி. சீதாராமன் .. | கொட்டியார் பற்று முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 மார்ச் 21 .. | திரு. கே. கணபதிப்பிள்ளை இல்லாத காலம் |

லயனல் சமரதுங்க,
செயலாளர்,
நீதிச்சேவைகள் ஆலோசனைச்சபை.

நீதிச்சேவைகள் ஆலோசனை, ஒழுக்காற்றுச்
சபைகள் அலுவலகம்,
த.பெ.573,
9 /52, கெப்பிட்டிப்போல வீதி,
கொழும்பு 5, 1973 ம் ஆண்டு ஏப்ரல் மீ 02 ந் உ.

4-351—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55

---

# மற்றைய நியமனங்களும் பிறவும்

1973 இன் இல. 227

இலங்கை நிருவாக சேவையில் பின்வரும் நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன :-

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. எஸ். ஜி. டீ. அல்விஸ் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை 1972.09.18 தொடக்கம் இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டவராக.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. ஜி. சி. அட்டன் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை 1972.09.18 தொடக்கம் உதவி உரிமை நிர்ணய உத்தியோகத்தராக.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. பீ. பி. பிலகெதர பதுளை நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான அரசாங்க அதிபரின் பணிப்பின்கீழ் 1971.10.01 இலிருந்து மறுகட்டளை பிறப்பிக்கும் வரை உதவி அரசாங்க அதிபராகக் கடமைபுரிய.



இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐத் சேர்ந்த திரு. சந்திர குணசேகர 1971.10.01 தொடக்கம் 1972.02.15 வரை கல்வியமைச்சின் உதவிச்செயலாளராக.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. டபிள்யு. ஜெ. டயஸ் 1972.10.06 தொடக்கம், கொழும்பில் பிரதிப் பிசுக்காலாக.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. ஜி. லியனரட்ண மறுகட்டளை பிறப்பிக்கும்வரை 1972.10.13 தொடக்கம் கிராம அபிவிருத்தி உதவிப் பணிப்பாளராக.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. எஸ். பீ. திவாரட்ண 1972.08.01 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. எ./எஸ். பி. அதிகாரி மறுகட்டளை பிறப்பிக்கும்வரை 1972.08.01தொடக்கம் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த திருமதி எஸ். விக்கிரமசிங்க மறுகட்டளை பிறப்பிக்கும்வரை 1972.08.01 தொடக்கம்

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த செல்வி சி. டி. தசநாயக மறுகட்டளை பிறப்பிக்கும் வரை 1972.10.07 தொடக்கம் கமநலச்சேவை உதவி ஆணையாளராக.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு II ஐச் சேர்ந்த திருமதி டி. ஐ. போறகே மறுகட்டளை பிறப்பிக்கும் வரை 1972.10.10 தொடக்கம் கிராம அபிவிருத்திப் பிரதிப் பணிப்பாளராக.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. க. கங்காதரன் றுமகட்டளை பிறப்பிக்கும் வரை 1972.09.18 தொடக்கம் சமூக சேவைகள் திணைக்களத்தில் சமூக சேவைகள் உதவிப் பணிப் பாளராக.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. எஸ். டபிள்யு. கெ. ஜெ. சமரநாயக்க றுமகட்டளை பிறப்பிக்கும் வரை 1972.10.01 தொடக்கம் கல்வியமைச்சின் உதவிச் செயலாளராக.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. எச். எச். பி. அத்துரெலிய மறுகட்டளை பிறப்பிக்கும்வரை 1972.11.01 தொடக் கம் நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் கவனிப்பு சேவைகளின் உதவி ஆணையாளராக.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. எம். எல். யூ. டீ. எஸ். மலல்கொட மறுகட்டளை பிறப்பிக்கும்வரை 1972.10.09 தொடக்கம் திறைசேரியின் வழங்கல் பதவியணிப் பகுதியின் உதவிப் பணிப்பாளரா.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. டி. டி. ஜெயசிங்க மறுகட்டளை பிறப்பிக்கும்வரை 1972.09.18 தொடக்கம் கமநலச் சேவைகள் உதவி ஆணையாளராக.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. கெ. வீரதுங்க மறுகட்டளை பிறப்பிக்கும் வரை 1972.09.18 தொடக்கம் கமநலச் சேவைகள் உதவி ஆணையாளராக.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. கெ. ஏ. எஸ். டி. கெஹெல்வலத்தென்ன மறுகட்டளை பிறப்பிக்கும்வரை 1972.10.09 தொடக்கம் கமநலச் சேவைகள் உதவி ஆணையாளராக.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. எஸ். எம். அரியரட்ண மறுகட்டளை பிறப்பிக்கும்வரை 1972.10.04 தொடக்கம் கமநலச் சேவைகள் உதவி ஆணையாளராக.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு II ஐச் சேர்ந்த திரு. டபிள்யு. எம். ரி. வி. அரம்பெபொல மறுகட்டளை பிறப்பிக்கும்வரை 1972.09.01 தொடக்கம் கமநலச் சேவைகள் உதவி ஆணையாளராக.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. ஏ. ச. ஜெ. மடுகல்லெ 1972.05.22 தொடக்கம் புகையிரதப் பகுதியில் மேலதிக பொது முகாமையாளராக (நிருவாகம்).

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. எஸ். சுப்பிரமணியம் 1972.05.22 தொடக்கம் புகையிரதப் பகுதியில் நிருவாக உத்தியோகத்தராக.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. எம். பீ. வீரப்பிற்றிய மறுகட்டளை பிறப்பிக்கும் வரை 1972.09.29 தொடக்கம் பதுளை நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப்பின்கீழ் மேலதிக அரசாங்க அதிபராக.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு II ஐச் சேர்ந்த திரு. வை. எம். டபிள்யு. பண்டார மறுகட்டளை பிறப்பிக்கும் வரை 1972.10.24 தொடக்கம் கேகாலை நிருவாக மாவட்ட அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் அம்மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக கடமைபுரிய.

பி. மகாதேவா,
செயலாளர்,
அரசாங்க நிருவாகம் உள்ளூராட்சி,
உண்ணாட்டலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி உள்ணாட்டு
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 7, 1973 ம் ஆண்டு மார்ச்சு மீ 30 ந் உ.

4–350/1—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55

---

1973 இன் இல. 228

பொது நிருவாக, உள்ளூராட்சி, உண்ணாட்டலுவல்கள் அமைச்சரினல் பின்வரும் நியமனங்கள் இலங்கை நிருவாக சேவையிற் செய்யப்பட் டுள்ளன :—

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்தவரும் மாத்தளை நிருவாக மாவட்டத்தின் உக்குவளைப் பிரிவின் மாவட்ட இறைவரி உத்தியோகத்தருமான திரு. ஈ. வீரசிங்க மறுகட்டளை பிறப்பிக்கும்வரை 1972.09.01 தொடக்கம் மாத்தளை நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் தமது கடமைகளுடன் அம்மாவட்ட உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்ற.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்தவரும் இரத்தினபுரி நிருவாக மாவட்டத்து மாவட்ட இறைவரி உத்தியோகத்தருமான (தலைமைக் காரியாலயம்) செல்வி சித்திரலதா குருகே மறுகட்டளை பிறப் பிக்கும் வரை 1972.10.13 தொடக்கம் தமது கடமைகளுடன் இரத்தினபுரி நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் அம்மாவட்ட உதவி அரசாங்க அதிபராகக் கடமை புரிய.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்தவரும் மாத்தளை நிருவாக மாவட்டத்தின் மாவட்ட இறைவரி உத்தியோகத்தருமான (தலைமைக் காரியாலயம்) திரு. டி. எம். ஜே. தசநாயக்க மறுகட்டளை பிறப்பிக்கும் வரை 1972.10.12 தொடக்கம் மாத்தளை நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் தமது கடமைகளுடன் அம்மாவட்ட உதவி அரசாங்க அதிபராகக் கடமை புரிய.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்தவரும் நுவ ரேலியா நிர்வாக மாவட்டத்தின் தலைமைக் காரியாலய மாவட்ட இறைவரி உத்தியோகத்தருமான திரு. டபிள்யு. எம். ஏ. விஜேகோன் மறுகட்டளை பிறப்பிக்கும்வரை 1972.10.12 தொடக்கம் தமது கடமைக ளுடன் நுவரேலியா நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப் பின் கீழ் அம்மாவட்ட உதவி அரசாங்க அதிபராகக் கடமை புரிய.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்தவரும் குருநாகல் நிருவாக மாவட்டத்தின் வாரியப்பொலைப் பிரிவின் மாவட்ட இறைவரி உத்தியோகத்தருமான திரு. டபிள்யு. எம். எம். பீ. வர்சக்கோன் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை 1972.09.01 தொடக்கம் தமது கடமைக ளுடன் குருநாகல் நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் அம்மாவட்ட உதவி அரசாங்க அதிபராகக் கடமை புரிய.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்தவரும் மாத்தறை நிருவாக மாவட்டத்து தலைமைக் காரியாலய மாவட்ட இறைவரி உத்தியோகத்தருமான திரு. கே. ரி. விமலரட்ன மறுகட்டளை பிறப்பிக்கும் வரை 1972.10.16 தொடக்கம் மாத்தறை நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் அம்மாவட்ட உதவி அரசாங்க அதிபராக தமது கடமைகளுடன் கடமை புரிய.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்தவரும் குருநாகல் நிருவாக மாவட்டத்து கல்கமுவாப் பிரிவின் மாவட்ட இறைவரி உத்தி யோகத்தருமான திரு. ஆர். எம். கருணரத்ன மறுகட்டளை பிறப்பிக்கும் வரை 1972.09.01 குருநாகல் நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் தமது கடமைகளுடன் அம்மாவட்டத்து உதவி அரசாங்க அதிபராகக் கடமை புரிய.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்தவரும் களுத்துறை நிருவாக மாவட்டத்து தலைமைக் காரியாலய மாவட்ட இறைவரி உத்தியோகத்தருமான திருமதி பி. அபேவர்த்தன மறுகட்டளை பிறப் பிக்கும் வரை 1972.10.12 தொடக்கம் களுத்துறை நிருவாக மாவட்ட அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் தமது கடமைகளுடன் அம்மாவட்ட உதவி அரசாங்க அதிபராகக் கடமை புரிய.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்தவரும் பொல நறுவை நிருவாக மாவட்ட தலைமைக் காரியாலய மாவட்ட இறைவரி உத்தியோகத்தருமான திரு. வை. ஏ. தயரட்ண மறுகட்டளை பிறப்பிக்கும் வரை 1972.10.16 தொடக்கம் தமது கடமைகளுடன் பொலநறுவை நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் அம்மாவட்ட உதவி அரசாங்க அதிபராகக் கடமை புரிய.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்தவரும் பதுளை நிருவாக மாவட்டத்து தலைமைக் காரியாலய மாவட்ட இறைவரி உத்தியோகத்தருமான திரு. எப். பீ. ஆர். டீ சில்வா மறுகட்டளை பிறப்பிக்கும்வரை 1972.09.19 தொடக்கம் தமது கடமைகளுடன் பதுளை நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் அம்மாவட்ட உதவி அரசாங்க அதிபராகக் கடமை புரிய.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு III ஐச் சேர்த்தவரும் புத்தளம் நிருவாக மாவட்டத்து தலைமைக் காரியாலய மாவட்ட இறைவரி உத்தியோகத்தருமான திரு. என். எச். பெரேரா மறுகட்டளை பிறப்பிக்கும் வரை தமது கடமைகளுடன் 1972.10.13 தொடக்கம் புத்தளம் நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் உதவி அரசாங்க அதிபராகக் கடமை புரிய.

இலங்கை நிருவாக சேவை வகுப்பு II ஐச் சேர்ந்த திரு. டபிள்யு. பீ. வேலெகம பதுளை நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப்பின்

கீழ் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை 1971.10.01 தொடக்கம் அம்மாவட்டத்து மேலதிக அரசாங்க அதிபராகக் கடமை புரிய.

பி. மகாதேவா,
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்ளூராட்சி,
உண்ணாட்டலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிருவாக, உள்ளூராட்சி,
உண்ணாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 7,
1973 ம் ஆண்டு மார்ச்சு மீ 30 ந் உ.

4-350/2—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55

1973 இன் இல. 229

நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

கொழும்பு 12, ஹல்ஸ்டோப் வீதி, இலக்கம் 116 ல் வசிக்கும் நடராஜா ஜயந்தன் அவர்கள் கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கிலப் பாஷையில் கடமைபார்க்கும் நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பி. மகாதேவா,
பொது நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

1973 ம் ஆண்டு மார்ச்சு மீ 23 ந் உ.

4-301—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55

# அரசாங்க அறிவித்தல்கள்

எல். டி.—பி 7/63

**1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டம்**

16அ என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்

1969 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 16அ என்னும் பிரிவின்படி எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, பதில் நிதியமைச்சர், பேர்னுட் சொய்சா ஆகிய நான் "தொழுநோயாளர்களின் மேம்பாட்டிற்கும் மறுசீரமைப்பிற்குமான சங்கத்தை" அப்பிரிவின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அறநிலையமொன்றென இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

பேர்னுட் சொய்சா,
பதில் நிதியமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மார்ச் மீ 31 ந் உ.

4-380/1—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55

எல். டி.—பி 7/63

**1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டம்**

16அ என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்

1969 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 16அ என்னும் பிரிவின்படி எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, பதில் நிதி அமைச்சர், பேனுட் சொய்சா ஆகிய நான் "கொழும்பு மாவட்ட மேற்றிராசனப் பிரிவின் புதிய கத்தோலிக்க தேவாலய கட்டிட நிதி" யை அப்பிரிவின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அறநிலையமொன்றென இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகிறேன்.

பேனுட் சொய்சா,
பதில் நிதி அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மார்ச் மீ 31 ந் உ.

4-380/2—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55

எல். டி.—பி 18/71

**1971 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனச் சட்டம்**

1971 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 21 (1) ஆம் பிரிவின் கீழ், நிதியமைச்சரின் ஒருப்பாட்டுடன், அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட துணைவிதி.

செயலாளர்,
நிதியமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மார்ச்சு மீ 30 ந் உ.

துணைவிதி

அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்டு 1971 டிசெம்பர் 23 ஆந் தேதிய 14,989/8 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட "1971 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனத் துணைவிதிகள்" இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :—

(1) அதற்கான இரண்டாம் அட்டவணையில், "இந்த உரிமம் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகள்" என்னும் தலைப்பின் கீழ், அதன்கண்ணுள்ள 16 (உ) என்னும் நிபந்தனையில், "மேலே 17 (ச) இல் குறிப்பிடப்பட்ட" என்னுஞ் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "மேலே 16 (ச) இல் குறிப்பிடப்பட்ட" என்னுஞ் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அதற்கான எட்டாம் அட்டவணையில்—

(அ) "இந்த உரிமம் பின்வரும் நிபந்தனைகளில் வழங்கப்படுகின்றது" என்னும் தலைப்பின் கீழ், அதன்கண்ணுள்ள 10 ஆம் நிபந்தனையில், "ஐந்துபடிகளில்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "நான்குபடிகளில்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) "வெளிப்படுத்துதல்" என்னும் தலைப்பின் கீழ், "இந்த உரிமம் நீக்கப்படலாமெனவும், என்னால் வைப்பிலிடப்பட்ட பணம் எல்லாம் பறிமுதல் செய்யப்படலாமென வும் ஏற்றுக்கொள்கிறேன்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "இந்த உரிமம் நீக்கப்படலாமென ஏற்றுக் கொள்கிறேன்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்.

4-261/1—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55

எல். டி.—பி. 18/71

**1971 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனச் சட்டம்**

1971 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 21 (1) ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட துணைவிதி.

செயலாளர்,
நிதி அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மார்ச்சு மீ 30 ந் உ.

துணைவிதி

1971, திசெம்பர் 23 ஆந் தேதிய 14,989/8 ஆம் இலக்க அதிவிசேடக் கசெற்றில் வெளியிடப்பட்ட 1971 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனத் துணைவிதிகள் அதற்கான நான்காம் அட்டவணையில், "இந்த உரிமம் பின்வரும் நிபந்தனைகளுக்கமைய வழங்கப்படுகின்றது" என்னும் தலைப்பின் கீழுள்ள அதன் 1 ஆம் நிபந்தனையில் "25 ரூபா" என்னுஞ் சொல்லமைப்பை விட்டுவிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன.

4-261/2—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55

எல். டி. பி. 35/49.

**தொலைச் செய்தித்தொடர்புகள் கட்டளைச் சட்டம்**

192 ம் அத்தியாயமான தொலைச்செய்தித்தொடர்புகள் கட்டளைச் சட்டத்தின் 13 ம் பிரிவின் கீழ் அஞ்சல், தொலைச்செய்தித்தொடர்புகள் அமைச்சரால் ஆக்கப்பட்ட விதிகள்.

சீ. குமாரசூரியர்,
அஞ்சல் தொலைச்செய்தித்தொடர்புகள் அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மார்ச் மீ 31 ந் வ.

**இந்திய–இலங்கை தொலைபேசி விதிகள்**

1. இந்த விதிகள் இந்திய–இலங்கை தொலைபேசி விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் தொலைபேசி அழைப்பின் மூலம் நடைபெறும் உரையாடலின் முதலாவது கூறுக் காலத்திற்கு கட்டணத்திற்குரிய நேரம் மூன்று நிமிடங்களாகும். இரண்டாவதற்கும் அதனைத் தொடரும் கூறுக் காலங்களுள் ஒவ்வொன்றிற்கும் கட்டணத்திற்குரிய நேரம் ஒரு நிமிடமாகும். இந்நோக்கத்திற்காக ஐந்து விநாடிகளுக்குக் கூடுதலாகவும் அறுபது விநாடிகளுக்குக் குறைவாகவும் ஏற்படும் எந்த இடைவேளைக்கும் கட்டணத்திற்குரிய நேரம் ஒரு நிமிடம் எனக் கணிக்கப்படும்.

(2) எந்த ஓர் அழைப்பிற்கும் குறிப்பிடப்பட்ட ஆக்ககூடிய காலஎல்லை இருக்க மாட்டாது ; எனினும், எப்படியிருப்பினும், நெருக்கடியான காலவேளையில் அழைப்புக்கள் மூன்று நிமிடங்கள் என்னும் முதல் கூறுக்கால எல்லைவரை வரையறுக்கப்படலாம்.

(3) மூல அழைப்புக் கம்பித் தொடர்பையோ அல்லது அதன் ஏதாவது ஒரு பகுதியையோ பாவனை செய்வதற்கு விரும்பும் வேறு ஓர் அழைப்பாளரைத் தவிர்க்கும் வகையில் ஒரு நேரத்தில் ஓர் அழைப்புக்குக் கூடுதலாக எந்த ஓர் அழைப்பாளரும் மூலக்கம்பித் தொடர்பை பயன்படுத்த உரித்துடையவராகலாகாது.

(4) அழைப்பின் நிகழ்ச்சிக்கால எல்லை வரையறுக்கப்பட்டிருப்பின், அழைப்புக்குத் தொடர்பு வழங்கும் பொழுது இயலுமாயின், அழைப்பவருக்கு அவ்விதம் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். அழைப்பின் தொடர்பைத் துண்டிப்பதற்கு ஒரு சில விநாடிகளுக்கு முன்னராக இயலுமேயாயின் அழைப்பாளருக்கும் அழைக்கப்பட்டவருக்கும் இவ்விதம் அறிவித்தல் வேண்டும்.

3. (1) ஒரு இந்திய–இலங்கைத் தொலைபேசி அழைப்பு இவ்வாறு பதிவு செய்யப்படலாம் :—

(அ) ஒரு சாதாரண அழைப்பாக, அதாவது, ஓர் அழைப்பு எந்த ஒரு குறிப்பிட்ட எண்ணில் இருந்து இன்னொரு குறிப்பிட்ட எண்ணுக் குரியதாயின் மாத்திரமே, அழைக்கும், அழைக்கப்படும் எண்களும் பதியப்படும், அல்லது

(ஆ) ஒரு தனிப்பட்ட அழைப்பாக, அதாவது, அழைக்கும் எண்ணிலிருந்து ஒரு குறிப்பிட்டவரிடமிருந்து அழைக்கப்பட்ட எண்ணில் ஒரு குறிப்பிட்டவருக்குரிய ஓர் அழைப்பு.

(2) ஓர் அழைப்பாளர் ஒரு தனிப்பட்ட அழைப்பைப் பதிவுசெய்யும் பொழுது அவருக்காக ஒரு பதிலாளின் பெயரையும், அழைக்கப்பட்ட எண்ணுக்கு அல்லது அதற்கு மாற்றாக வேறு எந்த குறிப்பிட்ட எண்ணுக்கும் ஒரு பதிலாளின் பெயரையும் வழங்க விரும்பம் தெரிவித்தல் வேண்டும். பெயர் கொடுக்கப்பட்டவர்கள் கொடுக்கப்பட்ட எண்களில் அழைப்பைப் பெற்றுக்கொண்டால் அழைப்பானது பயன்படுத்தப்பட்டதெனக் கொள்ளப்படும்.

(3) ஒரு சாதாரண அழைப்பின் விடயத்தில் அழைக்கும் எண் அழைக்கப்பட்ட எண்ணுடன் தொடர்புபடுத்தப்படும் வேளையில் இருந்தே உரையாடலின் முதற்கூற்றுக் கால எல்லை ஆரம்பிக்கத் தொடங்கியதாகக் கருதப்படும். தனிப்பட்ட அழைப்பின் விடயத்தில், அழைக்கப்பட்டவருடன் அல்லது அவரது பதிலாளருடன் அழைத்தவர் அல்லது அவரது பதிலாளர் தொடர்பில் ஈடுபடுத்தப்பட்டதும் ஆரம்பிக்கத்தொடங்கியதாகக் கருதப்படும்.

(4) சகல அழைப்புப் பதிவுகளும், அழைக்கப்பட்டவரால் தொடர்பு படுத்தப்படாமலும், அழைப்பவரால் மறுக்கப்படாமலும் அல்லது நீக்கஞ் செய்யப்படாமலும் இருக்கும்பொழுது செல்லுபடியாயிருக்கும்.

4. (1) ஒரு தனிப்பட்ட அழைப்பாக இருப்பின்—

(அ) ஓர் அழைக்கப்பட்ட எண்ணனது அல்லது குறிப்பிட்ட ஒருவர் அழைக்கப்பட்ட பின்னர் ஒரு மூல அழைப்புத் தொடர்புக்கு மறுப்பாரேயானால் அழைத்தவரிடமிருந்து ஒரு சாதாரண அழைப்பின் மூன்று நிமிடகாலத்திற்குரிய கட்டணம் அறவிடப்படுதல் வேண்டும் ;

(ஆ) அழைக்கப்பட்ட எண்ணுடன் தொடர்பு நிறுவப்பட்டதும் அழைப்பானது கைவிடப்பட்டால் அழைக்கப்படுபவர் அல்லது அவர் இல்லாதவிடத்து அத்தொலைபேசியில் எவரேனும் அழைக்கப்பட்டவரோ அல்லது அவரது பதிலாள் உரையாடுவதற்குப் பெற்றுக்கொள்ளப்பட முடியாமலிருக்கிறெனக் காணப்பட்டால் அதற்கு அறிவித்தற் கட்டணம் அறவிடப்படும்.

(இ) அழைக்கப்பட்ட எண்ணுடன் அழைப்பானது தொடர்புபடுத்த ஆயத்தமாயிருக்கும் நேரத்தில் அழைத்தவர் அல்லது அழைக்கப்பட்டவர் கிடைக்கப் பெறுதுவிடின் அல்லது உரையாடலுக்கு விருப்பில்லாதுவிடின் அல்லது அழைத்தவரிடமிருந்து அல்லது அழைக்கப்பட்டவரின் தொலைபேசியிலிருந்து பதில் இல்லாதுவிடின் அழைப்பு நீக்கஞ் செய்யப்படும், அல்லது

(ஈ) அழைக்கப்பட்டவர் ஒரு தொலைபேசி ஒப்பப்பணஞ்செலுத்துநரா யில்லாதவிடத்தும் குறிப்பிடப்பட்ட தொலைபேசி எண்ணுக்கு அவரை வருமாறு ஒழுங்குகள் மேற்கொண்ட பின்னரும் அவ்வகையான தொலைபேசி எண்ணில் அவரது சமுகத்தைப் பெறுவதற்கு தவறினமையினால் தொடர்பை நிறுவ முடியாது விட்டால் அல்லது அவர் வருவதற்கு முன்னராக அழைப்பானது நீக்கஞ் செய்யப்பட்டால் அறிவித்தற் கட்டணம் அறவிடப்படும்.

(2) அறிவித்தற் கட்டணம் எப்பொழுது அறவிடப்படுவேண்டுமெனத் தொலைச் செய்தித் தொடர்புகள் பணிப்பாளரின் முடிவே இறுதியான தாகும்.

5. பின்வரும் விடயங்களுக்குக் கட்டணம் அறவிடப்படலாகாது :—

(அ) அழைக்கப்பட்ட கம்பித் தொடர்பு அல்லது அழைக்கும் கம்பித் தொடர்பு ஓர் அழைப்பைப் பதிவுசெய்த பின்னர் பழுதடைந்தால் ;

(ஆ) ஓர் அழைக்கப்பட்ட எண்ணனது தொடர்பு நீக்கப்பட்டால் ;

(இ) அழைக்கப்பட்ட எண்ணிடமிருந்து ஒரு மறுமொழியும் இல்லாது விட்டால் ;

(ஈ) ஓர் அழைப்பானது இந்தியாவின் கட்டுப்பாட்டு மாற்று நிலையத்துக்கு அனுப்பப்பட்ட பின்னர் அழைக்கப்பட்ட ஒப்பப்பணஞ்செலுத்துநரினது கவனத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னராக நீக்கஞ் செய்யப்பட்டால்.

6. (1) ஓர் அழைப்பு அலுவலகத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட ஓர் அழைப்பிற்குத் தேவைப்படும் உரையாடலுக்கான காலஎல்லை ஒவ்வொன்றுக்கும் முன்கூட்டியே பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வகையான காலவெல்லைக்குப் பின்னர் அழைப்பாளரினது வேண்டுகோளுக்கு ஏற்ப, உரையாடலின் கூடுதலான காலத்திற்கு அழைப்பாளரால் தோதான கட்டணம் முன்னராகவே வைப்பிடப்பட்டிருந்தாலொழிய ஒருவித நீடிப்பும் வழங்கப்படலாகாது. அழைப்பாளர் ஒருவர், அவரால் முன்கூட்டியே பதிவு செய்யப்பட்ட முழுக்கால எல்லையும் முடிவுறுவதற்கு முன்னராக அவரது உரையாடலை முடித்துக்கொண்டால் அவரால் நடாத்தப்பட்ட பயன்பட்ட உரையாடலினது உண்மையான கால எல்லைக்கு அல்லது பயன்பட்ட உரையாடலினது முதல் கூற்றுக்கால எல்லைக்கு இவற்றில் எது நீடிப்பாயுளதோ, அதற்கு, கட்டணம் அறவிடப்படும்.

(2) ஓர் அழைப்பு அலுவலகத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட ஓர் அழைப்புக்கு அழைப்பு அலுவலகக் கட்டணம் இருக்கமாட்டாது. அழைப்பிற்குரிய கட்டணங்கள் முற்பணமாக இறுக்கப்படல் வேண்டும் ; எனினும், எப்படியிருப்பினும், உண்மையாக செலுத்தப்பட வேண்டிய கட்டணத்தைக் கட்டுப்பாட்டு மாற்றுநிலையம் முற்கூட்டியே கூற முடியாத நிலையில் இருக்குமாயின், அழைப்பாளர் ஏதாவதொரு நியாயமான தொகையை வைப்பாகச் செலுத்த வேண்டப்படுவதுடன், அத்தகைய வைப்புத் தொகைக்கும் அவரிடமிருந்து வருமதியாயுள்ள உண்மையான கட்டணங்களுக்கும் இடையிலான ஏதேனும் வேறுபாடு விடயத்திற்கேற்ப அழைப்பு முடிவுற்றதும் அவரால் செலுத்தப்படலாம், அல்லது அறவிடப்படலாம்.

7. ஓர் ஒப்பப்பணஞ்செலுத்துநரது சொந்தத் தொலைபேசியிலிருந்து ஆரம்பிக்கப்படும் எந்த இந்திய மூல அழைப்பும், ஒப்பப்பணஞ்செலுத்துநர் அவரது தொலைபேசி தொடர்புப்படுத்தப்பட்டுள்ள அஞ்சல் அலுவலக மாற்றுநிலையத்தில் பின்வரும் வைப்புப்பணத்தை இட்டு இருந்தால் ஒழிய, தொடர்புபடுத்தப்படுதலாகாது :—

(அ) இந்திய அழைப்புக்களுக்கும் கடல்கடந்த அழைப்புக்களுக்குமாக முதல் முறையாக ரூபா 150 பிணைப்பணமாகவும், அத்துடன்

(ஆ) எந்த வேளையிலும், இருவார இந்திய மூல அழைப்புக்களும் கடல்கடந்த மூல அழைப்புக்களும் தொடர்பில் ஒப்பப்பணஞ்செலுத்துநரிடமிருந்து வருமதியாயுள்ள சராசரித் தொகையானது 150 ரூபாவிற்கு அதிகரிக்குமாயின் அந்தச் சராசரிக்கு சமமான தொகை.

8. இந்திய மூல அழைப்புக்களின் கணக்கில் உள்ள பட்டியல்களை வாராந்தம் அளித்தல் வேண்டும். ஒப்பப்பணஞ்செலுத்துநர் இதைப் பூரணமாக ஏழு நாட்களுள் தீர்த்தல் வேண்டும். தவறின், மேலதிக அறிவித்தல் இன்றி இந்திய மூல அழைப்புக்களும் கடல்கடந்த மூல அழைப்புக்களுக்குமான வசதிகள் மீளப் பெறப்படும். தொலைபேசி உடன்படிக்கையிலுள்ள இயையான நிபந்தனைகளின் கீழ் அஞ்சல் தலைமையதிபதி கைக்கொள்ளக்கூடிய வேறு ஏதாவது நடவடிக்கைகளுடன் ஏதாவது நிலுவையாய் உள்ள இந்திய மூல அழைப்புக்களுக்

கான கணக்குத் தீர்க்கப்படும்வரை உள்நாட்டு மூல அழைப்புக்களுக்கான, வசதிகளும் மீளப் பெறப்படும்.

9. இந்தியாவிற்கு ஒரு தொலைபேசி மூல அழைப்புக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணம் அஞ்சல் தலைமையதிபதியினாலும் தொலைச்செய்தித் தொடர்புகள் பணிப்பாளரினாலும் தீர்மானிக்கப்பட்டு அஞ்சல் அலுவலகச் சுற்றறிக்கையில் காலத்திற்குக் காலம் அறிவிக்கப்படும்.

10. (1) இந்திய–இலங்கைத் தொலைபேசிச் சேவையினது தொழில் புரியும் எந்த வேளையிலும் மூடப்பட்டிருக்கும் இலங்கையிலுள்ள எந்த, மாற்று நிலையத்திலிருந்து அல்லது அழைப்பு அலுவலகத்திலிருந்து அல்லது அவற்றிற்கூடாக ஏற்படுத்தப்பட்ட இந்தியாவிற்கு எடுக்கப்பட்ட ஒவ்வொரு மூல அழைப்பிற்கும், 1938, மார்ச்சு 25 ம் திகதிய 8,360 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட உள்நாட்டுத் தொலைபேசி விதிகளின் 10 ம் விதியில் விதித்த குழப்பற் கட்டணம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓர் அறிவித்தற் கட்டணம் மாத்திரம் வரவேண்டியுற்றதாயிருக்குமிடத்து அல்லது சேவை காரணத்திற்காக அல்லது பிற காரணங்களுக்காக ஓர் அழைப்பானது பயனற்றதாகிவிடின் (1) ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட எந்த அழைப்பிற்கும் ஒரு குழப்பற் கட்டணமும் செலுத்தப்பட வேண்டியதில்லை.

11. 1935, மார்ச்சு 29 ம் திகதிய 1,812 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட இந்திய–இலங்கைத் தொலைபேசி விதிகள் பின்வருமாறு திருத்தப்பட்டவாறு இத்தால் நீக்கப்படுகின்றன.

12. 1836, சனவரி 24 ம் திகதிய 8,198 ம் இலக்க கசெற்றிற்கான குறைநிரப்பியில் பிரசுரிக்கப்பட்டவையும் அதில் "இலங்கைத் தந்தி விதிகள் (உள்நாடும் இந்திய–இலங்கையும்)" என அழைக்கப்பட்டவையுமான விதிகள், காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறு மேலும் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றன.

(1) "அத்தியாயம் III இந்திய–இலங்கைத் தந்தி விதிகள் 189 முதல் 205 வரையிலான விதிகள் (இரண்டுமுட்பட)" என்பதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய அத்தியாயத்தை இடுதல் மூலமும் :—

அத்தியாயம் III.

**இந்திய—இலங்கைத் தந்தி விதிகள்**

189. **பொது :** 1937 ம் ஆண்டின் வெளிநாட்டு, வானொலித் தந்தி விதிகளில் தரப்பட்ட நிபந்தனைகள், மட்டுப்பாடுகள், விகிதங்கள், ஏனைய கருமங்கள் ஆகியன பின்வரும் திரிபுகளுக்கு அமைய இந்திய–இலங்கைத் தந்திகளுக்கு ஏற்புடையனவாகும்.

190. **தந்திகளின் வகுப்புகள் :** பின்வரும் வகுப்பில் உள்ள தந்திகள் அனுப்பப்படுவதற்கு ஏற்றுக்கொள்ளப்படலாம் :—

(அ) உயிரின் பாதுகாப்புத் தொடர்பிலான தந்திகள் (வகுப்பு முற்கூறு : எல்விஎச்) ;

(ஆ) அரசாங்கத் தந்திகள் (ஐக்கிய நாடுகள் சாசனத்தின் ஏற்புடைமை தொடர்பிலான தந்திகள் உட்பட) (வகுப்பு முற்கூறு : எக்ஸ்எவ்எஸ்) ;

(இ) வாயுமண்டல ஆய்வுத் தந்திகள் (வகுப்பு முற்கூறு : ஓபீ எஸ்) ;

(ஈ) 1949, ஒகத்து 12 ம் திகதிய ஜெனிவா உடன்படிக்கையினால் யுத்த காலத்தில் பாதுகாக்கப்பட்ட ஆட்கள் சம்பந்தமான தந்திகள் ; (முகவரிக்கு முன்னர் "ஆர்சிரி" என்னும் பணம் செலுத்தப்பட்டதற்கான விசேட குறியுடன் போன்று தனிப்பட்ட தந்திகளுக்கான அதே வகுப்பு முற்கூறு) ;

(உ) தனிப்பட்ட தந்திகள் (சாதாரணம், வகுப்பு முற்கூறு எக்ஸ்எவ், அவசரம், வகுப்பு முற்கூறு எக்ஸ்எக்ஸ்எவ்) ;

(ஊ) பத்திரிகைத் தந்திகள் (சாதாரணம், வகுப்பு முற்கூறு இசற், அவசரம், வகுப்பு முற்கூறு எக்ஸ் இசற்) ;

(எ) சேவைத் தந்திகளும் சேவை அறிவிப்புக்களும் (வகுப்பு முற்கூறுகள் : ரிஎக்ஸ்ரி, எக்ஸ்எக்ஸ்ரி) ;

(ஏ) பணம் செலுத்தப்பட்ட சேவை அறிவிப்புகள் (வகுப்பு முற்கூறுகள் : எவ்எஸ்ரி, ஆர்எஸ்ரி).

**குறிப்பு :** கடிதத் தந்திகளும் பொதுநலவரசு சமூகத் தந்திகளும் அனுப்பப்படுவதற்கு ஏற்கத்தக்கவல்ல.

191. **விசேட சேவைகள் :** பின்வரும் விசேட சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம் :—

(அ) அவசர அனுப்புகையும், ஒப்படைப்பும் (முகவரிக்கு முன்னதாகப் பணம் செலுத்தப்பட்டதற்கான குறி : அவசரம்) ;

(ஆ) ஒப்பு நோக்கல் (முகவரிக்கு முன்னதாகப் பணம் செலுத்தப்பட்டதற்கான குறி : ரிசி) ;

(இ) முற்பணம் செலுத்திய மறுமொழி (முகவரிக்கு முன்னதாகப் பணம் செலுத்தப்பட்டதற்கான குறி : ஆர்பிஎக்ஸ்) ;

(ஈ) ஒப்படைப்பை உறுதிப்படுத்தல் (முகவரிக்கு முன்னதாகப் பணம் செலுத்தப்பட்டதற்கான குறி : பிசி) ;

(உ) அனுப்பியவரது வேண்டுகோளுக்கு மீள அனுப்புதல் (முகவரிக்கு முன்னதாகப் பணம் செலுத்தப்பட்டதற்கான குறி : எவ்எஸ்) ;

(ஊ) பல முகவரிகள் (முகவரிக்கு முன்னதாகப் பணம் செலுத்தப்பட்டதற்கான குறி : ரிஎம்எக்ஸ்) ;

(எ) அஞ்சல் பெறுபவரது வேண்டுகோளின் மேல் மீள நெறிப்படுத்தல் ;

(ஏ) கடுகதி ஒப்படைப்பு (முகவரிக்கு முன்னதாகப் பணம் செலுத்தப்பட்டதற்கான குறி : எக்ஸ்பி/கடுகதி) ;

(ஐ) அஞ்சல் மூலம் அல்லது விமான அஞ்சல் மூலம், ஒப்படைப்பு, சாதாரணம் அல்லது பதிவு செய்யப்பட்டது. (முகவரிக்கு முன்னதாகப் பணம் செலுத்தப்பட்டதற்கான குறி : போஸ்ற்/பிஎவி/பிஆர்/பிஎவிஆர்).

192. **கட்டணங்கள் :** இந்திய–இலங்கைத் தந்திகளுக்கான கட்டணங்கள் இலங்கை அஞ்சல் அலுவலகக் கைநூலில் பிரசுரிக்கப்படும்.

193. **விசேட சேவைகளுக்கான கட்டணங்கள் :** 191 ம் விதியில் கூறப்பட்டது. 1937 ம் ஆண்டின் வெளிநாட்டு வானொலித் தந்தி விதிகளில் விதித்ததைப் போல் இருத்தல் வேண்டும்.

194. **மீளளிப்புகள் :** விதி 165 (1) (ஆ) விலும் (இ) விலும் குறித்துரைக்கப்பட்ட இருபத்திநான்கு மணித்தியாலக் காலவேளை, இந்திய–இலங்கைத் தந்திகளுக்கு ஏற்புடையதாதலாகாது. அவ்வகையான எந்த விடயத்திலும் மீளளிப்பொன்று இந்தியத் தந்தி விதிகளினால் ஒரு மீளளிப்பு அனுமதிக்கப்படும் அளவுக்கு மட்டுமே வழங்கப்படும்.

195. **நீக்கல்கள் :** பின்வரும் விதிகள் இத்தால் நீக்கப்பட்டுள்ளன :—

(i) 1933 திசெம்பர் 15 ம் திகதிய கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறு 1909 ஒகத்து 27 ம் திகதிய கசெற்றிற்கான குறைநிரப்பியில் பிரசுரிக்கப்பட்ட தந்திகளை அனுப்புவதற்கான விதிகளின் 1 ம் விதி தொடக்கம் 127 ம் விதி வரை ;

(ii) 1929, ஒக்டோபர் 18 ம் திகதிய கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினால் திருத்தப்பட்டவாறான 1922, நவம்பர் 3 ம் திகதிய கசெற்றிற்கான அறிவித்தலினால் பிரசுரிக்கப்பட்ட இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் தந்திகளை மாற்றிப் பெறுவதை ஆளும் விதிகள்.

4–255—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55

---

**1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம்**

தத்துவங்கள் அளித்தல்

**கட்டளை**

1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2 (4) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி, வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக மந்திரியாகிய டிக்கிரி பண்டா இலங்கரத்ன ஆகிய நான், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு உதவியளித்தற்கு நியமிக்கப்பட்டுள்ள, இத்துடன் அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொருவருக்கும், குறித்த அட்டவணையின் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதும் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழுள்ளதும், அச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகளின் கீழுள்ளதுமான, பதிவாளரது அத்தகைய தத்துவங்களை, இக்கட்டளை மூலம் அளிக்கிறேன்.

டிக்கிரி பண்டா இலங்கரத்ன,
வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக மந்திரி.

கொழும்பு,
1973 ம் ஆு மார்ச் மீ 26 ந உ.

அட்டவணை

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. திரு. விஸ்வலிங்கம் மகேந்திரன் | கூட்டுறவுச் சங்கங்கள்—சட்டத்தின் கீழுள்ள தத்துவங்கள் :— பிரிவுகள் 3 (3 (1) (ஈ) ஐத்தவிர), 5, 6, 7, 8, 33, 39, 42 (1), 43, 44 (44 (6) ஐத் தவிர), 45, 46, 47, 50, 52, 53, 54, 58 (58 (2) (அ) வையும் 58 (5) ஐயுந் தவிர) 59, 68, 72 என்பவற்றின் கீழுள்ள பதிவாளரது சகல தத்துவங்களும் |
| 2. திரு. ஹியு இகிறவத்த | |
| 3. திருமதி பத்மாவதி தர்மதிலக ஜயவீர | |
| 4. திரு. சுகதபால பிட்டிகல லியனகே | |
| 5. திரு. அலுத் பட்டபெண்டிகே டயனிஸ் | |
| 6. திரு. ஆனந்த ஹேரத் | |
| 7. திரு. வன்னி உன்னகலாகே ஹேரத் | |
| 8. திரு. முதியான்சே அட்டம்பாவல | |
| 9. திரு. சேனாநாயக்க உபாசேன | |
| 10. திரு. வீரவர்த்தன பத்திரானஹாலாகே டொன் பாலித்த வீரவர்த்தன | |
| 11. சுனில் சந்த்ரா மான்னபெறும | |
| 12. திருமதி முகாந்திரம் முதியான்செலாகே சுவர்னலதா மெனிக்கே | |

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 13. திருமதி இனிகே கமலீனி சந்திராணி த சில்வா .. | விதிகளின் கீழுள்ள தத்துவங்கள் :— விதிகள் 3, 13, 14 (2), 15 (4), 23, 24, 27, 28, 29, 31, 32, 33அ, 37, 38, 42, 43, 45 என்பவற்றின் கீழுள்ள பதிவாளரது சகல தத்துவங்களும் |
| 14. திரு. விக்கிரமசிங்க பத்திரனகே சிறிசேன ஜயவர்த்தன .. | |
| 15. திரு. அல்கம கோறுளலாகே ஸ்டீபன் பெரேரா .. | |
| 16. திரு. தோம்பவலகே வில்லியம் பர்ணந்து | |
| 17. திருமதி ராஜகருண முதியான்செலாகே சந்த்ரபாலி குணரத்ன உடுகம்பொல | |
| 18. திருமதி சுவர்ணபாலி விக்கிரமசிங்க | |
| 19. திரு. விமலசேன மத்தக்க கமகே | |
| 20. திரு. ஜயரத்ன ஜயசிங்க | |
| 21. திரு. அதிக்காரி முதியான்செலாகே சேகர பண்டா அதிக்காரி .. | |
| 22. திரு. செனவிரத்ன பண்டார திவாரத்ன | |
| 23. திரு. மாபொட்டுவான ஜாகொடகே சந்த்ரதாச .. | |
| 24. திரு. கந்தையா சண்முகலிங்கம் | |
| 25. திரு. போத்தலகே மத்தியஸ் பர்ணந்து | |
| 26. திரு. தர்மசேன பண்டா மாமடுவ | |
| 27. திரு. வர்ணகுலசூரிய தொமஸ் லோ | |
| 28. திரு. பிலிப் எல்றெட் டன்ஸ்ரன் ஹிப்பொலிற் பர்ணந்து .. | |
| 29. திரு. விஜெயரட்ணம் துரைரட்ணம் | |
| 30. திரு. சிறிமான்ன வல்கம | |
| 31. திரு. ஜோசப் ரேலன்ட் த விவேர கருணரத்ன .. | |
| 32. திரு. பிரேமரஞ்சன் திலகரத்ன | |
| 33. திரு. சண்முகம் ஞானப்பிரகாசம் | |
| 34. திரு. சின்னத்தம்பி நித்தியானந்தன் | |

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 35. திரு. இத்தன்கொட சிறில் ஜயரத்ன | விதிகளின் கீழுள்ள தத்துவங்கள் :— விதிகள் 3, 13, 14 (2), 15 (4), 23, 24, 27, 28, 29, 31, 32, 33அ, 37, 38, 42, 43, 45 என்பவற்றின் கீழுள்ள பதிவாளரது சகல தத்துவங்களும் |
| 36. திரு. தம்பையா கந்தசாமி | |
| 37. திரு. குஸ்திஞ்ஞ வடு குலத்திலக்க த சில்வா .. | |
| 38. திரு. சிறிதாச த சொய்சா முனசிங்க | |
| 39. திரு. டொன் லயனல் பீட் ஜோசெப் அபேரத்ன .. | |
| 40. திரு. சால்ஸ் நெவில் உடலாகம | |
| 41. திரு. இல்லங்கன் பேலிகெதர ஜேம்ஸ் இலங்கசேகர .. | |
| 42. திரு. தியாகராஜா சண்முகராஜா | |
| 43. திரு. சின்னத்துரை நாகலிங்கம் | |
| 44. திரு. போதரகமகே றிச்சர்ட் பெரேரா | |
| 45. திரு. ராஜபக்ச டொன் பியதாச ஜயசேகர | |
| 46. திரு. வன்னக்குவத்த வடுகே ஜோன் றெஜினோல்ட் அலோய்ஷஸ் பர்ணந்து | |
| 47. திரு. றுபர்ட் வின்ஸ்ரன் சமரசேகர கருணரத்ன .. | |
| 48. திரு. குணதிலக்க பண்டா பெறமுனே | |
| 49. திரு. மாவத்தகே ரியூறின் பெரேரா செனவிரத்ன .. | |
| 50. திரு. சுதும முதியான்செலாகே றன்பண்டா .. | |
| 51. திரு. கந்தையா குணரட்ணம் | |
| 52. திரு. விஜயரட்ணம் சுந்தர் ராமநாதர் | |
| 53. திரு. தந்திரிமுதலிகே டொன் பிரான்சிஸ் றுபர்ட் .. | |
| 54. திரு. கந்தையா ராமதாசன் | |
| 55. திரு. ஜோன்பிள்ளை எட்வேட் சவுந்தரராஜா .. | |
| 56. திரு. புஞ்சி நிலமே கருணரத்ன | |
| 57. திரு. பிரான்சிஸ் சமரசிங்க | |
| 58. திரு. டொன் குலதுங்க சமரவீர | |

4-302—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55

---

**1970 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க ஸ்ரீ லங்கா அரச வியாபாரக் கூட்டுத்தாபனச் சட்டம்**

அறிவித்தல்

1970 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க ஸ்ரீ லங்கா அரச வியாபாரக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் பிரிவு 10 ன் கீழ் கௌரவ தோட்டத் தொழிற்றுறைகள் அமைச்சரால் திரு. கரில் லுடிகன்ஸ் இலங்கை அரச தேயிலைக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் சபை உறுப்பினராக 1973 ம் ஆண்டு மார்ச் மாதம் 26 ந் திகதி தொடக்கம் 1975 ம் ஆண்டு பெப்புரவரி மாதம் 17 ந் திகதி வரையுள்ள காலத்திற்கு கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

டொறிக் த சூசா,
செயலாளர்,
தோட்டத் தொழிற்றுறைகள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஏப்பிறில் மீ 3 ந் உ.

4-344—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55

---

**கூலி நிருணய சபைக் கட்டளைச்சட்டம்**

அறிவித்தல்

1973 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 25 ம் தேதி தொடக்கம் மூன்று ஆண்டுகாலம் மேசுவகை உற்பத்தித் தொழிலுக்கான கூலி நிருணய சபையில் உறுப்பினராயிருப்பதற்கு (சட்டவாக்கங்களின் 136 ம் அத்தியாயமான) கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டத்தின் 9 ம் பிரிவுக்கமையத் தொழில் அமைச்சரவர்கள் பின்வருவோரை மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென 1971 ம் ஆண்டின் கூலி நிருணய சபை ஒழுங்கு விதிகளின் 30 ம் ஒழுங்கு விதிக்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது :—

ஏ. ஈ. கோகளி மொரகொடை,
செயலாளர்,
தொழில் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மார்ச்சு மீ 29 ந் உ.

**நியமன உறுப்பினர்**

1. பேராசிரியர் ஏ. டீ. வீ. இந்திரரத்தின
2. திரு. டீ. ஜே. முனசிங்கா
3. திரு. எம். என். ஜயந்தா ஜயரத்தின.

**தொழில் வழங்குவோர் பிரதிநிதிகள்**

1. திரு. உலோமிட் த மெல்
2. திரு. எஸ். ஏ. சி. முசின்
3. திரு. ஈ. எஸ். அப்பாத்துரை
4. திரு. கே. விஜயரத்தினம்
5. திரு. டீ. ஈ. மெண்டிஸ்
6. திரு. எஸ். பி. பாலசூரியா
7. திரு. வீ. எஸ். எம். த மெல்
8. திரு. பேணட் ஏ. பொத்தேசு
9. திரு. எட்வேட் த எஸ். சில்வா
10. திரு. ஏ. ஆர். பின் அட்காம்

**தொழிலாளர் பிரதிநிதிகள்**

1. திரு. எம். எம். செனிவிரத்தின
2. திரு. சுனில் கடிகமா
3. திரு. அனில் ஒபயசேகர, வழக்குரைஞர்
4. திரு. நந்தசிறீ குணரத்தின
5. திரு. டபிள்யு. எவ். பர்ணந்து
6. செல்வி பெல்சிடா பர்ணந்து
7. திரு. எம். சி. எம். சாபி
8. திரு. இஸ்டீபன் த கொஸ்தா
9. திரு. ஒஸ்வின் பர்ணந்து
10. திரு. எல். ரீ. பர்ணந்து

4-280—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55

### கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டம்

பொறியியற் றெழிலுக்கான கூலி நிருணய சபை, (சட்டவாக்கங்களின் 136 ம் அத்தியாயமாகிய) கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டத்தின் 30 ம் பிரிவு வாயிலாகத் தமக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் காட்டப்பட்டிருக்கும் வகையாகத் தீர்மானங்களை மாற்றிக்கொள்ளவிருக்கும் தமது கருத்தினை அக் கட்டளைச் சட்டத்தின் 28 ம் பிரிவில் அமைந்துள்ள ஏற்பாடுகளுக்கமைய, இத்தால் அறிவிக்கின்றது.

உத்தேசிக்கப்பட்டுள்ள தீர்மானங்களுக்கெதிரான ஆட்சேபனைகள், 1973 ம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 26 ந் தேதி நண்பகல் 12 மணி வரையும் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படுவனவாகும்.

அப்படிப்பட்ட ஆட்சேபனை ஒவ்வொன்றும், அவ்வண்ணம் ஆட்சேபித்தற்கான நியாயங்களைக்காட்டும் கூற்றுடன், எழுத்து வாயிலாக அனுப்பப்படுதல்வேண்டும்.

டபிள்யு. எல். பி. த மெல்,
தலைவர்,
பொறியியற் றெழிலுக்கான
கூலி நிருணய சபை.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஏப்பிறில் மீ 06 ந் வ.

அட்டவணை

பொறியியற் றெழிலுக்கான கூலி நிருணய சபையால் ஆக்கப்பட்டு, 1945 ம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ந் தேதி வெளிவந்த 9,447 ம் செய்திமடலிற் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டனவும், 1970 ம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ந் தேதி வெளிவந்த 14,920/7 ம் இலக்க அசாதாரணச் செய்திமடலிற் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலிற் குறிக்கப்பட்டபடி இறுதியாக மாற்றப்பட்டனவுமாகிய தீர்மானங்கள், அந்த அட்டவணையில் " அரசாங்க விடுமுறைகள் (25 ம் பிரிவு) " என்னும் தலைப்பின் கீழ் 8 ம் உப–பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உப–பந்தியினை இதுவதன்மூலம் மேலும் மாற்றப்படுதல் வேண்டும் :—

" அரசாங்க விடுமுறைகள் (25 ம் பிரிவு) "

8. (அ) இப்பந்தியினதும் 2 ம் பந்தியினதும் ஏற்பாடுகளுக்கமைய, வேலைக்கமர்த்துபவர் ஒவ்வொருவரும் தம்மிடம் தொழில் புரியும் தொழிலாளர்கள் யாவருக்கும் 1971 ம் ஆண்டின் 29 ம் இலக்க விடுமுறை அதிகாரச் சட்டத்தின் பொருளுக்கிணையப் பின்வரும் அரசாங்க விடுமுறைகளை ஊதியத்துடன் கூடிய விடுமுறைகளாக வழங்குதல்வேண்டும் :—

1. தமிழ்த் தைப்பொங்கற் திருநால்
2. சிங்கள, தமிழ்ப் புத்தாண்டுத் திருநாளுக்கு நேரடுத்து முந்திய நாள்,
3. சிங்கள, தமிழ்ப் புத்தாண்டுத் திருநாள்,
4. மீலா–துன்–நபி (நபிகள் நாயகம் ஸல் அவர்கள்) பிறந்த திருநாள்,
5. மே நாள் (மே மாதம் 1 ந் தேதி),
6. சிங்கள விசாக மாதத்தின் பூரணைக்கு நேரடுத்த நாள்,
7. இலங்கைக் குடியரசுத் திருநாள் (மே மாதம் 22 ந் தேதி),
8. பண்டாரநாயகா நினைவு நாள் (செத்தெம்பர் மாதம் 26 ந் தேதி),
9. நத்தார்த் திருநாள்.

4–423–11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55

## அரசாங்கப் பகுதிகளின் நானுவித அறிவித்தல்கள்

### கம்பனிகள் கட்டளை சட்டம் (145 ம் அத்தியாயம்)

277 (3) ம் பிரிவின் கீழ் பெயர் நீக்கத்திற்கான அறிவித்தல்

கித்தஹேன எஸ்ரேற்ஸ் லிமிரட் கம்பனிகள் கட்டளைச்சட்டத்தின் (145 ம் அத்தியாயம்) ஏற்பாடுகளின் கீழ் 1972.01.25 இல் கூட்டப் பெற்ற கித்தஹேன எஸ்ரேற்ஸ் லிமிரட் என்னும் கம்பனி வியாபாரம் செய்யவில்லை எனவும், செயற்படவில்லை எனவும் நம்புவதற்கு நியாயமான காரணம் இருந்தலால் இதற்கு மாறுபாடான காரணம் காட்டாதவிடத்து, கம்பனிகள் பதிவாளராகிய ருவான்புர விக்மன் டி சில்வா ஆகிய நான், கம்பனிகள் கட்டளைச்சட்டத்தின் (145 ம் அத்தியாயம்) 277 (3) ம் பிரிவின்படி செயலேற்று, இத்திகதியில் இருந்து 3 மாத இறுதியில் கித்தஹேன எஸ்ரேற்ஸ் லிமிரட் இன் பெயர் இத்திணைக்களத்தில் இருக்கும் கம்பனிகளின் பதிவேட்டில் இருந்து நீக்கப் பெற்று, குறித்த கம்பனி குலைக்கப்படுமென இத்தால் அறிவித்தல் தருகிறேன்.

ரு. வி. த சில்வா,
கம்பனிகள் பதிவாளர்.

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு பங்குனி மீ 29 ந் வ.

4–424—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55

### திருவிழாச் சட்டம்

எகொடபிடிய முஸ்லிம் திருவிழா, 1973

1954 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ந் திகதி பிரசுரிக்கப்பட்ட 10,630 ம் இலக்கத்தைக் கொண்ட அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் பிரகாரம் திருவிழாச் சட்டத்தின் கீழ் உள்ள 3 ம் பிரிவின்படி (175 ம் அத்தியாயம்) இத்தால் பொதுமக்களுக்கு அறிவிப்பது என்னவென்றால், கொடப்பிடிய, போருவையிலுள்ள, மாத்தறை மாவட்டத்திலுள்ள அகுறஸ்ஸையிலுள்ள மொஹிதீன் முஸ்லிம் பள்ளியில் வருடாந்தத் திருவிழா 1973 ஆம் ஆண்டு மே மாதம் 10 ந் திகதி தொடங்கி, 1973 ஆம் ஆண்டு மே மாதம் 20 ந் திகதி முடிவடையும்.

இத்திருவிழாவுக்குரிய சட்டம் 1954 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ந் திகதி பிரசுரிக்கப்பட்டுள்ள 10,630 ம் இலக்கத்தைக் கொண்ட அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையின்படி திருவிழா நடக்கும் வளவுக்குள் குறிக்கப்பட்டுள்ள சட்டம் அமுலில் இருக்கும் என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஜீ. ஏ. எம். கருணாரத்ன,
மாத்தறை மாவட்ட அரசாங்க அதிபர்.

மாத்தறைக் கச்சேரி,
1973 ம் ஆண்டு மார்ச்சு மீ 30 ந் வ.

4–293—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55

இல. 440

### 1970 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (விசேட ஏற்பாடுகள்) கட்டளைச் சட்டம்

2 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1970 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (விசேட ஏற்பாடுகள்) கட்டளைச் சட்டத்தின் 2 (1) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, கூட்டுறவு ஆக்க ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமாகிய இராச்குரு பண்டார இராசகுரு ஆகிய நான், இதிலுள்ள முதலாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சங்கங்களை (" இணைக்கப்படும் சங்கங்கள் " எனக் குறிக்கப்பட்டவை) இதிலுள்ள இரண்டாவது அட்டவணையில் குறிக்கப்பட்டிருக்கும் சங்கத்துடன் (" பிரதான சங்கம் " எனக் குறிக்கப்பட்டிருப்பது) 1973, ஏப்பிறில் 27 ஆந் திகதி தொடக்கம் இக்கட்டளை மூலம் இணைக்கிறேன்.

ஆர். பி. இராசகுரு,
கூட்டுறவு ஆக்க ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஏப்பிறில் மீ 03 ந் வ.

**முதலாவது அட்டவணை**

இணைக்கப்படும் சங்கங்கள்

| | சங்கத்தின் பெயர் | பதிவு இலக்கம் | பதிவுத் திகதி |
|---|---|---|---|
| 1. | மட்டுப்படுத்தப்பட்ட பொத்துவில் கதிரிய கூட்டுறவு கடற்றெழிற் சங்கம் | 1102 | 1942.06.04 |

**இரண்டாவது அட்டவணை**

பிரதான சங்கம்

| சங்கத்தின் பெயர் | பதிவு இலக்கம் | பதிவுத் திகதி |
|---|---|---|
| மட்டுப்படுத்தப்பட்ட பொத்துவில் தேர்தற்றெகுதி கடற்றெழிலாளர் கூட்டுறவுச் சங்கம் | கல். 133 | 1972.02.16 |

4-384/1—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55

---

இல. 439

**1970 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (விசேட ஏற்பாடுகள்) கட்டளைச் சட்டம்**

2 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1970 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (விசேட ஏற்பாடுகள்) கட்டளைச் சட்டத்தின் 2 (1) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக் கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, கூட்டுறவு ஆக்க ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமாகிய இராசகுரு பண்டார இராசகுரு ஆகிய நான், இதிலுள்ள முதலாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சங்கங்களை (" இணைக்கப்படும் சங்கங்கள் " எனக் குறிக்கப்பட்டவை) இதிலுள்ள இரண்டாவது அட்டவணையில் குறிக்கப்பட்டிருக்கும் சங்கத்துடன் (" பிரதான சங்கம் " எனக் குறிக்கப்பட்டிருப்பது) 1973, ஏப்பிரில் 27 ஆந் திகதி தொடக்கம் இக்கட்டளை மூலம் இணைக்கிறேன்.

ஆர். பி. இராசகுரு,
கூட்டுறவு ஆக்க ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஏப்பிரில் மீ 03 ந் உ.

**முதலாவது அட்டவணை**

இணைக்கப்படும் சங்கங்கள்

| | சங்கத்தின் பெயர் | பதிவு இலக்கம் | பதிவுத் திகதி |
|---|---|---|---|
| 1. | மட்டுப்படுத்தப்பட்ட காரைதீவு வடிவேலன் கூட்டுறவு கடற்றெழிற் சங்கம் | ஈ. டி. 289 | 1949.02.02 |
| 2. | மட்டுப்படுத்தப்பட்ட காரைதீவு திருத்தங்க வேலாயுதபுரவி கூட்டுறவு கடற்றெழிற் சங்கம் | ஈ. டி. 290 | 1949.02.02 |
| 3. | மட்டுப்படுத்தப்பட்ட காரைதீவு முஸ்லீம் கூட்டுறவு கடற்றெழிற் சங்கம் | கே. எம். 75 | 1963.12.31 |
| 4. | மட்டுப்படுத்தப்பட்ட காரைதீவு ஹமீதிய கரவலை கூட்டுறவு கடற்றெழிற் சங்கம் | கே. எம். 106 | 1967.12.12 |
| 5. | மட்டுப்படுத்தப்பட்ட காரைதீவு பஹறிய கரவலை கூட்டுறவு கடற்றெழிற் சங்கம் | கே. எம். 119 | 1969.10.11 |
| 6. | மட்டுப்படுத்தப்பட்ட நிந்தாவூர் தெற்கு கூட்டுறவு கடற்றெழிற் சங்கம் | ஈ. டி. 286 | 1949.01.11 |
| 7. | மட்டுப்படுத்தப்பட்ட நிந்தாவூர் ஜமாலியா கரவலை கூட்டுறவு கடற்றெழிற் சங்கம் | ஈ. டி. 766 | 1957.02.01 |
| 8. | மட்டுப்படுத்தப்பட்ட நிந்தாவூர் அஷாபிய கடற்றெழிலாளர் கூட்டுறவுச் சங்கம் | ஈ. டி. 844 | 1958.04.10 |
| 9. | மட்டுப்படுத்தப்பட்ட நிந்தாவூர் பருக் கூட்டுறவு கடற்றெழிற் சங்கம் | கே. எம். 60 | 1961.04.07 |
| 10. | மட்டுப்படுத்தப்பட்ட ஒலுவில் கூட்டுறவு கடற்றெழிற் சங்கம் | ஈ. டி. 247 | 1947.11.10 |
| 11. | மட்டுப்படுத்தப்பட்ட அட்டாளைச்சேனை ஹமீதிய கடற்றெழிலாளர் கூட்டுறவு கடனுதவு விற்பனவுச் சங்கம் | கே. எம். 83 | 1964.10.27 |
| 12. | மட்டுப்படுத்தப்பட்ட அட்டாளைச்சேனை சம்சுல் ஹித்தய கடற்றெழிலாளர் கூட்டுறவு கடனுதவு விற்பனவுச் சங்கம் | கே. எம். 90 | 1965.03.05 |
| 13. | மட்டுப்படுத்தப்பட்ட அட்டாளைச்சேனை பிரிவு 1 ஜின்னு ஆழ் கடல் கடற்றெழிலாளர் கூட்டுறவு கடனுதவு விற்பனவுச் சங்கம் | கல். 129 | 1971.12.15 |

**இரண்டாவது அட்டவணை**

பிரதான சங்கம்

| சங்கத்தின் பெயர் | பதிவு இலக்கம் | பதிவுத் திகதி |
|---|---|---|
| மட்டுப்படுத்தப்பட்ட நிந்தாவூர் தேர்தற் தொகுதி கடற்றெழிலாளர் கூட்டுறவுச் சங்கம் | கல். 134 | 1972.02.23 |

4-384/2—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55

---

இல. 438

**1970 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (விசேட ஏற்பாடுகள்) கட்டளைச் சட்டம்**

2 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1970 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (விசேட ஏற்பாடுகள்) கட்டளைச் சட்டத்தின் 2 (1) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக் கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, கூட்டுறவு ஆக்க ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமாகிய இராசகுரு பண்டார இராசகுரு ஆகிய நான், இதிலுள்ள முதலாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சங்கங்களை (" இணைக்கப்படும் சங்கங்கள் " எனக் குறிக்கப்பட்டவை) இதிலுள்ள இரண்டாவது அட்டவணையில் குறிக்கப்பட்டிருக்கும் சங்கத்துடன் (" பிரதான சங்கம்" எனக் குறிக்கப்பட்டிருப்பது) 1973, ஏப்பிரில் 22 ஆந் திகதி தொடக்கம் இக்கட்டளை மூலம் இணைக்கிறேன்.

ஆர். பி. இராசகுரு,
கூட்டுறவு ஆக்க ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஏப்பிரில் மீ 03 ந் உ.

**முதலாவது அட்டவணை**

இணைக்கப்படும் சங்கங்கள்

| | சங்கத்தின் பெயர் | பதிவு இலக்கம் | பதிவுத் திகதி |
|---|---|---|---|
| 1. | மட்டுப்படுத்தப்பட்ட பெரிய கல்லாறு வடக்கு கடற்றெழிலாளர் கூட்டுறவு கடனுதவு விற்பனவுச் சங்கம் | ஈ. டி. 452 | 1953.07.04 |
| 2. | மட்டுப்படுத்தப்பட்ட ஒந்தாச்சிமடம் ஸ்ரீராமமூர்த்தி கூட்டுறவு கடற்றெழிலாளர் சங்கம் | மட. 137 | 1972.02.16 |

**இரண்டாவது அட்டவணை**

பிரதான சங்கம்

| சங்கத்தின் பெயர் | பதிவு இலக்கம் | பதிவுத் திகதி |
|---|---|---|
| மட்டுப்படுத்தப்பட்ட மண்முனை தெற்கு கடற்றெழிலாளர் கூட்டுறவுச் சங்கம் | மட. 140 | 1972.02.16 |

4-384/3—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| மார்ச் .. | 2.3.73 | வெள்ளி .. | 23.2.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 9.3.73 | வெள்ளி .. | 2.3.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 16.3.73 | வெள்ளி .. | 9.3.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 23.3.73 | வெள்ளி .. | 16.3.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 30.3.73 | வெள்ளி .. | 23.3.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| எப்பிறில் .. | 6.4.73 | வெள்ளி .. | 30.3.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 11.4.73 | புதன் .. | 6.4.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 19.4.73 | வியாழன் .. | 11.4.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 27.4.73 | வெள்ளி .. | 19.4.73 | வியாழன் .. | ந.ப. 12.00 |

எஸ். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆம் ஒகத்து மீ 18 ந் உ.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.